# ஆடிப் பட்டம் தேடி விதை

ஆடிமாதத்தில் பருவமழை தொடங்கும் சரியான காலம் பார்த்து நம் உழவர்கள் வயலைத் தயார்செய்து விதைகளை மண்ணில் விதைப்பர்.அதைப் போல் நாம் நமது வாழ்வில் உரிய நேரத்தில் வரும் சந்தர்ப்பங்களையும் காலத்தினையும் பயன்படுத்தாவிட்டால் வாழ்வில் மறுபடியும் வரலாம்- வராமலும் போகலாம்.ஆனால் ஒரு குழந்தையின் வாழ்வில் ஒவ்வொரு வயதிலும் ஒரு ஆடிப்பட்டம் வருகிறது.ஆனால் ஆசிரியர்களும் பெற்றோரும் அதைத் தவற விட்டால் மீண்டும் வராது.இதை வைத்தே மாண்டிசொரி மனிதனின் வளர்ச்சியை நான்கு நிலைகளாகப் பிரித்துள்ளார்.

க.பிறப்பு முதல் இரண்டு வயது வரை.

உ.இரண்டு வயது முதல் ஆறு வயது வரை.

ங.ஆறு முதல் ஒன்பது வயது வரை.

ச,ஒன்பது முதல் பன்னிரண்டு வயது வரை.

*மேற்கொண்டு பதினெட்டு வயது வரை அவர் வளர்ச்சிக்காலங்களை ஆய்வு செய்துள்ளார்.

இந்த வயதுகளில் பிள்ளைகள் அறிவு,உணர்ச்சி,தேவைகள்,அன்பு,ஒழுக்கம்,ஆக்கப்பூர்வமான செயல்கள்,உணவு,பழக்கவழக்கங்கள்,சமூகத்தொடர்பு எனப் பல நிலைகளில் மாறுபடுவதைக் காணலாம்.உடலும் மனமும் ஒருங்கே வளர வேண்டாமா?ஆனால் அந்தக் கால மாற்றங்களில் பெற்றோர்களும் ஆசிரியர்களும்மிகவும் கவனமாக கவனித்துச் செயல்பட வேண்டும்.அதைவிட முக்கியம் அந்த மாறுதல்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.ஆனால் நம் எதிர்பார்ப்புகளும்,ஆணவமும் விடுவதில்லை.

உதாரணம்:இரண்டரை வயதில் கை-கால் அசைவுகளுக்குப் பயிற்சி தரும் சாதனங்கள் பின்னர் உதவாது.[ஓரளவுக்கு உதவலாம்]ஆறு வயதில் பிள்ளையின் ஓவியம் ரசிக்கப் படாத போது அக்கலைத் திறன் அங்கீகாரமும் வழிகாட்டலும் இன்றி அப்படியே வீணாகிறது.நம்முள் பலர் புலம்புவோம்,அதாவது நமது திறமைகளை நம் பெற்றோர்கள் கண்டு ஊக்குவிக்கவில்லை என்று.அதை நாமும் செய்யலாமா?

பிள்ளைக்கு வேண்டிய சாதங்களை சக்திக்கு ஏற்ப வாங்கி ஊக்குவிய்யுங்கள்.அதை உரிய தருணத்தில் அங்கீகாரம் செய்யுங்கள்,படிப்படியாக அறிவு பரிணாமம் அடைய வேண்டும்.
* மாண்டிசொரி பள்ளியில் உள்ள சாதங்கள் பல அவரால் ஆழ்ந்த விஞ்ஞான ஆய்வுகளுக்குப் பின்னரே வடிவமைக்கப் பட்டவை.அவை ஒவ்வொரு வயதுக்கும் இடையே பாலமாக இருப்பவை.

* அவை மிகவும் ஒழுங்காக,சுத்தமாக உரிய இடத்தில் இருக்க வேண்டும்.அவை முறையாகக் குழந்தைக்குக் கற்பிக்கப் படவேண்டும்.அப்போது அக்குழந்தை தனக்குள் ஒரு ஆர்வத்துடன் ஆழ்ந்து மீண்டும் மீண்டும் வேலைசெய்யும் போது அறிவு மேன்மையுற்றுப் பக்குவம் அடைகிறது.அப்போது அவனுள் கட்டுப்பாடு வளர்கிறது.

*மேலும் அன்பின் மேலீட்டால் உங்கள் பிள்ளையின் உடல் வலிமையைக் கட்டுப்படுத்த வேண்டாம்.சதா கொஞ்சுவதும்,தூக்குவதும் எந்தவேலையையும் நீங்களே செய்வதும் தேவையில்லை.மாண்டிசொரி கூறுகிறார் ,இரண்டரை வயதுக் குழந்தையால் ஒரு மைல் நடக்க முடியுமாம்.

*ஆனால் தூக்கிக் கொஞ்ச வேண்டிய காலத்தில் அவனை நிராகரித்தால் நாளை அவன் உங்களைப் பல வேளைகளில் நிராகரிக்கும் அபாயமும் உள்ளது.பத்து வயதில் சாப்பிட அடம் பிடிக்கும் மகளுக்குக் கொஞ்சி ஊட்டுவதை மாண்டிசொரி கண்டிக்கிறார்.ஆனால்

இருபது வயதில் அவள் ,'' அம்மா!ப்ளீஸ்....நீ ஊட்டி எத்தனை நாட்கள் ஆயிற்று?'' என்று கேட்டால் ஓடுங்கள் கிச்சனுக்கு.அது அவ்வப்போது

அன்பினைப் புதுப்பித்துப் பார்க்கும் தேவை.

குழந்தைக்கு என்ன பரிசு தருவது?

கருவான நாள் முதல் குழந்தையின் ஆன்மா செயல் படுகிறது.கர்ப்பினிப் பெண்கள் தங்களின் குழந்தைக்குத் தேவையான அனைத்தையும் விதைகளாக தினமும் எண்ணத்தால் ஊட்டலாம்.பக்தப் ப்ரகலாதனின் வரலாறு நாம் அறிந்த விஷயம் தானே?என் தோழியின் மகனுக்கு ஏழு வயது ஆகிறது.அற்புதமாக விஷ்ணு சகஸ்ரநாமம் சொல்கிறான்.இந்தியை வெகுவிரைவில் கற்றுக் கொண்டு விட்டான்.காரணம் வேறு ஒன்றுமில்லை.அவள் அவனை கர்ப்பத்தில் சுமக்கும் போதே சகஸ்ரநாமாவளியை முறையாகப் பாராயணம் செய்து கருவை வளர்த்ததோடு,இந்தியை இவள் கற்றிருக்கிறாள்.அவ்வளவு தான்.

ஆனால் இன்று பல கர்ப்பினிப் பெண்கள் தேவையில்லாத மனவேதனைகளை வரவழைத்துக் கொண்டும் அழுதும் சாப்பிடாமலும் கர்ப்ப வாசக் கருவிற்கு த்ரோகம் செய்கிறார்கள்.
கர்ப்ப காலம் என்பது நம் கைகளில் உள்ள பச்சைக்களிமண் போன்றது.நீங்கள் என்ன வேண்டுமானாலும் அதைக் கொண்டு வடிவமைக்கலாம்.

எல்லாமே புதிதல்லவே?
நாம் வாழ்க்கையில் அநேகமாக பலவிஷயங்களை மற்றவர்களிடம் இருந்து தானே ''இமிடேட்'' செய்கிறோம்?நல்ல முன் மாதிரிகளைக் குழந்தை பார்த்து இமிடேட் செய்தால் கவலையில்லை.இந்த விஷயத்தில் தான் நாம் கவனமாக இருக்க வேண்டும்.மேலும் ஒரு குழந்தையின் உடல் வலுவானது என்பதை அவன் சதா ஓடியாடி விளையாடுகிறானா என்பதைவைத்து கணிக்க முடியாது.தன் தேவைக்கு ஏற்ப அந்தக் குழந்தை தன்னிச்சையாக தன் உடலைச் செயல்பட வைக்கிறதோ அக்குழந்தையே ''ஞானி'',''உயரிய மன---உடல் கட்டுப்பாடு உடையவன்'' என்கிறார் மாண்டிசொரி.

& குழந்தைகளுடன் நீங்களும் குழந்தையாக,ஆனால் விழிப்புணர்வுடன் கூடியவராக மாற வேண்டும்.

& நீங்கள் உடலால் பெரியவர்கள் என்பதற்காக,பயம் கலந்த மரியாதை அவர்களுக்கு வரக்கூடாது.உண்மையான ஆத்மானுபவ அன்புடன் நீங்கள் பழகி வாழ வேண்டும்.

& மனதாலும் உடலாலும் பிள்ளையை பாதிப்புக்குள் வதைக்காதீர்கள்.

&நீங்கள் எவ்வளவு பண்பட்டவராக இருக்கின்றீரோ அதை வைத்துத் தான் உங்கள் பிள்ளையும் வளர்வான்.

& ஒரு குழந்தையின் முன்னேற்றம் என்பது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பால் தான் முடியும்.ஒருவரே முழுமையாகச் செயல்பட இயலாது.பள்ளியில் சேர்த்தாயிற்று,இனி எல்லாம் ஆசிரியர் பார்த்துக் கொள்வார் என்று இருப்பது தவறு.

& பள்ளியில் நடப்பதை வீட்டில் பெற்றோர்கள் மேற்கொண்டு செயல் படுத்த வேண்டும்.

& குழந்தையை ஒரு செடி என்று எடுத்துக் கொண்டால்,பெற்றோர்கள் தண்ணீர்,ஆசிரியர்கள் சூரியவெளிச்சம் எனலாம் படி இவ்விருவரும் அவ்வளவு முக்கியம்.

& குழந்தைக்கு எல்லாவற்றையும் காட்டுங்கள் [வயதிற்கு ஏற்ப] ,அவனது ஈடுபாட்டினை கவனியுங்கள் ,அவனே அவனுக்கு இஷ்டமான வேலைகளை,பாடங்களைச் செய்யட்டும்.நீங்கள் ஊக்குவிய்யுங்கள்.

& குழந்தை பொய் பேசினால்,அழுதால்,கனவில் பயந்தால்,சரியாகச் சாப்பிடாவிட்டால்,அதிகமாகச் சாப்பிட்டால்,சரியாகத் தூங்காவிட்டால்,அதிகமாகத் தூங்கினால்,எதற்கெடுத்தாலும் பயந்தால்,அதைர்யப் பட்டால் தயவு செய்து அவனுடன் கலந்து பேசுங்கள்,உதவுங்கள்.இதற்காகத் தானே கல்யாணம்?நல்ல பிள்ளையை வளர்த்து சமுதாயத்திற்கு அளிப்பது தானே நம் கடமை?

& உங்கள் குடும்பப் பாரம்பரியம்,கலாச்சாரம்,கட்டுப்பாடுகளை,குடும்பச் சிறப்புகளை,உறவுகளை உரிய காலத்தில் குழந்தைக்கு அறிமுகம் செய்யுங்கள்.

& இன்று பல குழந்தைகள் நமது விதண்டாவதத்தாலும்,சோம்பேறித்தனத்தாலும் உறவுகளையே அறியாமல் வாழ்கிறார்கள்.

& நல்ல இனிய பெயர்களால் அன்புடன் குழந்தைகளை அழையுங்கள்.மாண்டிசொரி இந்தியாவில், சென்னை அடையாற்றில் வாழ்ந்த போது தன் பள்ளியில் ஆண் பிள்ளைகளை ‘‘மகனே’’ என்று தான் அழைப்பாராம்.

& கண்கவரும் பொம்மைகளும் விளையாட்டுப் பொருள்களும் வாங்கிக் குவிக்காதீர்கள்.அவை சில காலமே அவர்களை சந்தோஷப் படுத்துபவை என்பது மாண்டிசொரியின் ஆய்வு முடிவு.அப்பா சைக்கிளைத் துடைக்கும் போதொ மகனையும் அழைக்கட்டுமே,என்ன அற்புதமாக அவன் வேலை செய்கிறான் என்று பாருங்கள்.

& வேலையை முடிக்க எதையும் ‘‘லஞ்சம்’’ தரவேண்டாம்.

& உங்களால் சொன்னபதி நடக்க முடியாவிட்டால் அதை ஏன் என்று விளக்கி,மன்னிப்பு கேட்பதில் பாவமில்லை.என் நண்பரின் மகன் வெளிநாட்டிலிருந்து வந்தான்.அவனுக்கு தினமும் நான் மாலை சீக்கிரம் வீட்டுக்கு வர வேண்டும்.சில நாட்கள் என் வேலைகளால் தாமதம் ஆனபோது நான் அவனிடம் காரணத்தைக் கூறி விளக்கினேன்.அவன் என் மீது அதனால் மேன்மேலும் அன்பும் மரியாதையும் கூட்டினான்.எல்லாக் காரணங்களும் உண்மையாக இருக்க வேண்டியதில்லை,அது முடியவும் முடியாது.நியாயமான காரணங்களைக் கூறலாம்.

& நல்ல பழக்கங்களை நீங்கள் கடைப்பிடிக்காமல் கற்றுத் தருவதில் பலனில்லை.

& சிறு சிறு வேலைகளில் அவனுக்கும் பொருப்பு தந்து கடமை உணர்ச்சியை ஊக்குவிய்யுங்கள்.தவறு ஏற்பட்டால் அமைதியாகச் சொல்லிக் கொடுங்கள்.
உதாரணம்:என் பள்ளியில் ஒரு விழா நடைபெறுகிறது என்றால் மாணவர்களே முன்நின்று பல நிகழ்ச்சிகளை ஏர்பாடு செயவர்.ஆசியர்கள் கூடவே இருந்து வழிநடத்துவோம்.அதனால் அவர்களின் உழைப்பும்,தன்னம்பிக்கையும் உயர்கிறது.

அன்பர்களே!கடைசியாக ஒன்று கூறுகிறேன்.

‘‘ குழந்தைகள் சதா எவ்விதப் பலனையும் எதிர்பாராது தங்களுக்குப் பிடித்த வேலைகளைச் செய்யும் கர்மயோகிகள் ’’ என்கிறார் மாண்டிசொரி அம்மையார்.அதுதான் உண்மை.அதனால் தான் பல அவதார புருஷர்கள் தம் பால்ய வயதில் செயற்கரிய விஷயங்களைச் செய்தார்கள்.நம் பிள்ளைகளும் அவதாரப் புருஷர்கள் தான்.அவர்களின் வாழ்க்கையை அவர்கள் வழியில் சென்று வளர்ச்சியடையச் செய்வோம்!!!

நன்றி!